இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27.02.2026

# புதைகுழியில் அல்ல; இமயத்துக்கு!

தமிழ்நாட்டை புதைகுழிக்குள் தள்ளி விட்டது தி.மு.க. அரசு என்று புலம்பி இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. புதைகுழியில் அல்ல; இமயத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது தமிழ்நாடு என்பதை பல்வேறு புள்ளி விபரங்கள் மூலமாக மெய்ப்பிக்க முடியும். இந்தப் புள்ளி விபரங்கள், கணிப்புகள் அனைத்தும் ஒன்றிய அரசின் அறிக்கைகள் தானே தவிர, நமது அறிக்கைகள் அல்ல.

தமிழ்நாடு அரசின் அறிக்கைகள் அல்ல; இன்னும் சொன்னால் தமிழ்நாட்டில் உருவான அறிக்கைகள் அல்ல. டெல்லியில் உருவான அறிக்கைகள். அதிலும் குறிப்பாக ஒன்றிய அரசின் அறிக்கைகள். இது எதையும் படிக்க மாட்டேன், பார்க்க மாட்டேன், அதை யார் சொன்னாலும் கேட்க மாட்டேன் என்று அடம்பிடித்துக் கொண்டுதான் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லி வருகிறார் பழனிசாமி.

தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் புதைகுழிக்குத் தள்ளியவர் பழனிசாமிதான். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2011 முதல் 2021 வரைக்கும் தரை மட்டத்துக்கு இறக்கியது அ.தி.மு.க. ஆட்சிதான்.

2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு வெள்ளை அறிக்கையை அரசு தாக்கல் செய்தது. முந்தைய அ.தி.மு.க. ஆட்சி தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை எந்தெந்த வகையில் எல்லாம் சீரழித்தது என்பது அதில் உள்ளது.

அந்த அறிக்கையில், **“2011-12 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை உச்சநிலையில் இருந்தது. அது கடந்த (2012-21) பத்தாண்டு காலத்தில் மந்த நிலைமையை அடைந்துள்ளது. அதிலும் குறிப்பாக 2013 - 14 - ஆண்டில் இருந்து தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை மிக மோசமான நிலையை அடைந்து வருகிறது. இப்படி நெருக்கடியில் இருந்த நிலையை கொரோனா என்ற பெருந்தொற்றுப் பரவல் கூடுதலாகப் பாதித்துவிட்டது. 2006-13 காலக்கட்டத்தில் ஏழு ஆண்டுகளில் 5 ஆண்டுகள் தமிழ்நாடு அரசு உபரி வருவாயை அடைந்திருந்தது. 2013 முதல் பற்றாக்குறை தொடர்ந்து வருகிறது. 2017- 19 காலக்கட்டத்தில் இந்தியாவிலேயே அதிகளவு வருவாய் பற்றாக்குறை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு ஆக்கப்பட்டு விட்டது”** என்று சொல்லப்பட்டுள்ளது. இதற்குப் பழனிசாமியின் பதில் என்ன?

“2016- 21 அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிதிப்பற்றாக் குறையில் வருவாய் பற்றாக்குறை விகிதம் என்பது 52.48 சதவிகிதம் ஆகும். இது முந்தைய ஆட்சியில் 2011 ஆம் ஆண்டில் 14.95 சதவிகிதமாக இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியின் உண்மையான செலவுகள் கட்டுப்படுத்தப்படவில்லை. பற்றாக்குறைகள் மறைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இன்றைய கடன் என்பது 5,70,189 கோடி ரூபாய் ஆக இருக்கிறது. 2010 இல் 16.68 சதவிகிதமாக இருந்த கடனை 2011 இல் - தி.மு.க. ஆட்சியில் - 15.36 சதவிகிதமாக குறைத்தோம். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் அது 25 சதவிகிதம் ஆகிவிட்டது” என்று அந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இதற்கெல்லாம் பழனிசாமியின் பதில் என்ன?

**தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாக புதைகுழிக்குத் தள்ளியவர் பழனிசாமியே! இத்தகைய சூழலில் ஆட்சிக்கு வந்து, தமிழ்நாட்டை இமயத்துக்கு உயர்த்தியதுதான் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனை.**

**கடந்த நிதியாண்டில் 11.19 விழுக்காடு என்ற உயரிய பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு எட்டி இருக்கிறது என்பதுதான் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மகத்தான சாதனையாகும். மகுடம் என்று சொல்லத்தக்க சாதனை ஆகும். கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்நாடு இத்தகைய வளர்ச்சியை அடைவது இதுவே முதல்முறை. இந்தியாவில் எந்த மாநிலமும் இத்தகைய வளர்ச்சியைப் பெறவில்லை.**

ஒன்றிய அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2024-25 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களின் வளர்ச்சி புள்ளிவிவரங்கள் வெளியாகி இருக்கிறது. அதில்தான் இது இருக்கிறது.

**இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2024 -25 ஆகிய ஆண்டில் 6.5 விழுக்காடாக இருக்கிறது. தற்போது தமிழ்நாடு 11.19 விழுக்காடாக உயர்ந்து விட்டது. இதுதான் தமிழ்நாட்டின் வெற்றியாகும். இதைச் சொல்வது ஒன்றிய அரசுதான். நாம் அல்ல. இதைக் கூடத் தெரிந்து கொள்ளும் திறன் இல்லாத பழனிசாமி, நான்காண்டு காலம் அந்தப் பதவியில் எப்படி உட்கார்ந்து இருந்தார்?**

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமிழ்நாடு 9.4 விழுக்காடு பங்களிப்பைச் செலுத்துகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியானது இந்த ஆண்டு மட்டும் 31.19 லட்சம் கோடி ஆகிவிட்டது. தொழில் துறையில் தமிழ்நாடு 14.75 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது. சேவைத் துறையானது 11.3 விழுக்காடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது.

அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்கும் இந்திய முதன்மை மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருக்கிறது. மின்னணு சாதனங்கள், துணிகள், தோல் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறது. பொறியியல் இயந்திர ஏற்றுமதியில் இரண்டாமிடம் வகிக்கிறது. ஏற்றுமதி ஆயத்த நிலைக் குறியீட்டில் தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கிறது. வணிகப் பொருட்கள் ஏற்றுமதி இரண்டு மடங்கு ஆகி இருக்கிறது. கேழ்வரகு, கரும்பு விளைச்சலில் முதலிடத்தையும் எண்ணெய் வித்துகளில் இரண்டாம் இடத்தையும், நிலக்கடலை விளைச்சலில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் இருக்கிறது. கல்வியிலும் சுகாதாரத்திலும் முன்னணி மாநிலமாக இருக்கிறது. இது தொடர்பான புள்ளிவிபரங்களை பழனிசாமி வாங்கிப் பார்த்துக் கொள்ளலாம்.

**கடைசி இடத்துக்கு தமிழ்நாட்டை தள்ளியவர் பழனிசாமி. முதலிடம் உயர்த்தினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். பழனிசாமி வெட்கமில்லாமல் எப்படி அறிக்கை விடுகிறார் எனத் தெரியவில்லை.**

●●

### கரை புரண்டு ஓடும் காவிரியாய் – தடைபோட முடியாத கடல் அலையாய்

# திருச்சியில் திரள்வோம்! திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்போம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு சூளுரை!

**சென்னை, பிப். 27 - கரை புரண்டு ஓடும் காவிரியாய் - தடைபோட முடியாத கடல் அலையாய் திருச்சியில் திரள்வோம்! திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்போம்! என்று கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் சூளுரை மேற்கொண்டு அறிக்கை விடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி மார்ச் 9 இல் திருச்சியில் 10 லட்சம் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளும் மாபெரும் நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டை இந்தியாவே வியந்து பார்க்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்து மிகப் பிரம்மாண்டமாக நடத்திட தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

திருச்சியின் மாநாடு திருப்புமுனை மாநாடு என்பதை விட திக்கெட்டும் கழகத்தின் வெற்றியை உறுதி செய்திடும் மாநாடாக நடத்திட வேண்டும். திருச்சியில் திரளும் கூட்டம் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்குக் கட்டியம் கூறுவதாய் அமைந்திட வேண்டும்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் ஓரணியில் தமிழ்நாடு, என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைகள், கழக இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு, வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - உறுப்பினர்கள் பயிற்சிக் கூட்டம், வெல்லும் தமிழ்ப்பெண்கள் மகளிரணி மாநாடுகள், வீடு வீடாகப் பரப்புரை என அசுர வேகத்தில் நம் கழகம் களப்பணியாற்றி வந்தாலும் கழகத் தலைவர் அவர்கள் கூறியது போல திருச்சி மாநில மாநாடு தான் வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான Main Picture ஆக அமைய உள்ளது.

### அனைத்து நிர்வாகிகளும் பங்கேற்பீர்!

இந்த மாபெரும் மாநில மாநாட்டில் அனைத்து தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்ட - மாநகர - நகர - ஒன்றிய -பகுதி - பேரூர் - வார்டு - கிளைக் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் மாநில -மாவட்ட - மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் - நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், செயற்குழு- பொதுக்குழு உறுப்பினர்கள் என கழகத்தின் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொள்ள வேண்டும் என அழைக்கிறேன்.



சார்பு அணிகளின் மாநிலச் செயலாளர்கள், அமைப்பாளர்களும் தங்கள் அணி சார்பில் அனைவரும் முழுமையாக கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

### வாகன விவரங்களை மார்ச் 1க்குள் அனுப்பிடுக!

10 லட்சம் பேர் கலந்து கொள்ளும் இம்மாபெரும் மாநாட்டிற்கான முன் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திடும் வகையில் அனைத்து கழக மாவட்ட செயலாளர்களும் அந்தந்த மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் அளவில் நிர்வாகிகள் கூட்டங்களை நடத்தி திருச்சி மாநில மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் எண்ணிக்கை, வாகன வசதிகள், செய்ய வேண்டிய முன் ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்திட வேண்டும் எனவும், வாகன நிறுத்தும் வசதி, போக்குவரத்து வழித்தட ஏற்பாடுகளை முன் கூட்டியே திட்டமிட வசதியாக அந்தந்த மாவட்டங்களில் இருந்து கிளம்பும் வாகன விவரங்களை மார்ச் 1 ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்டச் செயலாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அதேபோல ஒரு கழக நிர்வாகியும் விடுபடாமல் மாநாட்டில் கலந்து கொள்வதையும், கழகத் தலைவர் உரையை முடிக்கும் வரையில் இராணுவக் கட்டுப்பாட்டுடன் இருப்பதற்கும் வழிகாட்டி, மாநாட்டு திடலுக்கு உரிய நேரத்திற்கு வந்துவிடுவதையும் அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் உறுதி செய்திட வேண்டும். மாவட்டத்தின் கடைசி வாகனம் மாநாடு நோக்கி கிளம்பிய பிறகு தான் மாவட்ட செயலாளர்கள் மாநாட்டிற்கு கிளம்ப வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கரை புரண்டு ஓடும் காவிரியாய் - தடைபோட முடியாத கடல் அலையாய் திருச்சியில் திரள்வோம் - கழகத் தலைவர் அவர்களை மீண்டும் முதலமைச்சராக்க சூளுரைப்போம். மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்போம்.

ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வாக்குறுதியை நிறைவேற்றிய திராவிட மாடல் அரசு:

# ராசிபுரத்தில் நிரந்தர பட்டுக்கூடு ஏலம் மையத்தால் விவசாயிகளுக்கு நேரடி பலன்! புதிய பொருளாதார எழுச்சி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பெருமிதம்!

*நாமக்கல், பிப். 27-*

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டம் ஊனவேலம்பட்டி பஞ்சாயத்து ஆணைகட்டிபாளையம் பகுதியில் வட்டு விவசாயிகள் நலன் கருதி சுமார் 6000 சதுரடி பரப்பளவில் ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகம் பாராளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 2 கோடியே 20 லட்சம் மதிப்பில் ராசிபுரம் அரசு பட்டுக்கூடு அங்காடி திறப்பு விழா மற்றும் ‘, ரூ.50.00 இலட்சம் மதிப்பில் கல்முனை 10 100 பாகம் மற்றும் பட்டு முறுக்கேற்றம் மைய கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா மற்றும் ரூ. 75 லட்சம் மதிப்பில் 142 விவசாயிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

தொடர்ந்து ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகத்திற்கு அருகாமையில் பட்டு விவசாயிகள் அங்காடிக்கு கொண்டு வரும் பட்டுக் கூடுகளை மதிப்புக்கு கூட்டிட ஒரு எண்ணிக்கையிலான 10 பேசின்கள் கொண்ட பலமுனை வட்டு நூற்பகம் மற்றும் முறுக் கேற்றும் அலகு நிறுவிடுவதற்கான அமைத்திடும் பணிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பட்டு வளர்ச்சித் துறை இயக்குனர் சாந்தி தலைமை தாங்கினார். இணை இயக்குனர் செ.பொன்மாரி, மண்டல துணை இயக்குனர் சி.ரெ. நிஷா, உதவி இயக்குனர் கி.நிஷாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழகக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்துகொண்டு புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பட்டுக்கூடு அங்காடியை திறந்து வைத்து, பேசுகையில்



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நாமகிரிப்பேட்டை, புதுச் சத்திரம், ராசிபுரம், மோகனூர், பரமத்தி வேலூர், எலச்சிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மல்பெரி சாகுபடி மற்றும் பட்டு வளர்ப்பு தொழில் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. இப்பகுதி விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளை தர்மபுரி மாவட்டம் மற்றும் கர்நாடக மாநிலத்தின் மைசூர் போன்ற பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இதனால் போக்குவரத்து செலவு மற்றும் குறைந்த விலை போன்ற பிரச்சனைகள் அவர்களுக்கு ஏற்பட்டன.

இந்நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட உறுதிமொழிக்கிணங்க, 2021ஆம் ஆண்டு ஆட்சி அமைந்ததும் ராசிபுரத்தில் பட்டுக்கூடு ஏலம் மையம் தொடங்கப் பட்டது. தொடக்கத்தில் ஆண்டுக்கு சுமார் 50 ஆயிரம் கிலோ அளவில் பட்டு ஏலம் நடைபெற்ற நிலையில், தற்போது அது ஒரு லட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது.

விவசாயிகள் கோரிக்கையின்படி, இஆக்சன் முறை கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூ.2 கோடிக்கும் அதிக தொகையில் ராசிபுரத்தில் நிரந்தர கட்டிடத்துடன் கூடிய பட்டுக்கூடு ஏலம் மையம் அமைக்கப்பட்டு, கட்டிடப் பணிகள் நிறைவு பெற்று பட்டு வளர்ச்சித் துறை இயக்குனரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புதிய அங்காடி மூலம் வெளிமாநில மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகள் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்துள்ளதால், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடைக்கு நியாயமான மற்றும் அதிக விலை கிடைக்கும் சூழல் உருவாகியுள்ளது. இதனால், போக்குவரத்து செலவாக ஆயிரக்கணக்கில் செலவழிக்க வேண்டிய நிலைமையும் தவிர்க்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த மையத்தின் மூலம் சுமார் ரூ.20 கோடிக்கும் அதிக மதிப்பில் பட்டு ஏலம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், அரசு சார்பில் பட்டு நூற்பாலை மற்றும் காஸ்டிங் (Twisting) மையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு, தொகுதி வளர்ச்சி நிதியின் மூலம் அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அரசே நேரடியாக ஏலத்தில் பங்கேற்று பட்டுக்கூடைகளை கொள்முதல் செய்யும் சூழல் உருவானால், வியாபாரிகள் கூட அதிக விலைக்கு போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டு, அதன் பலன் நேரடியாக விவசாயிகளுக்கு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், ராசிபுரம் பட்டுக்கூடு அங்காடி தர்மபுரி போன்ற பகுதிகளில் உள்ள மையங்களைப் போல புகழ்பெற்ற சந்தையாக வளர்ச்சியடையும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தை செயல்படுத்த உதவிய முதலமைச்சர், துணை முதலமைச்சர், பட்டு வளர்ச்சித் துறை அமைச்சர், இயக்குனர் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள், பொதுப்பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்..

இராசிபுரம் ஒன்றிய திமுக செயலாளர் கே பி ஜெகநாதன், முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் சேகர் (எ) பெரியசாமி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சத்தியசீலன், திமுக வழக்கறிஞர் அணி கண்ணன், கூனவேலம்பட்டி சரவணன், மற்றும் பட்டுக்கூடு விவசாயிகள், வியாபாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசலில் அ.தி.மு.க., த.வெ.க. உள்ளிட்ட மாற்று கட்சிகளைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்டோர் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு தி.மு.க.வினர் வேஷ்டி அணிவித்து வரவேற்றனர். இதில் விராலிமலை தேர்தல் பொறுப்பாளர் அஞ்சுகம் பூபதி, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.கோவிந்தராஜ், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா, பேரூராட்சி கவுன்சிலர் அ.பிரபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.